[14th August 1963

Two chilling stations are contemplated under the scheme, one at Tiruvarur and the other at Mayuram or Mannargudi. The selection of the place for the chilling plant has not yet been finalised. These chilling stations will collect and chill all the surplus milk available in the area within a radius of about 10 to 15 miles and the milk so chilled will be transported to Thanjavur for processing, bottling and distribution in the urban area of Thanjavur.

(அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கும் யூனியன், தஞ்சாவூரில் பாஸ்டர் முறைப்படி பாலைப் பதப்படுத்தும் இயந்திரத்தை 1963-64-ல் நிறுவத் தொடங்கும். கட்டிடம் கட்டுதல் போன்ற வேலைகள் 1963 ஜூலையில் ஆரம்பிக்கப்படும். தேவைப்படும் இயந்திரங்களை வாங்கி நிறுவும் வேலை 1964-ம் ஆண்டு இறுதிக்குள் பூர்த்தியடைந்து நிலையம் செயல்படத் துவங்கும்.

இத்திட்டத்தின்கீழ் "பாலைக் குளிர வைக்கும் நிலையங்கள்" இரண்டு—திருவாரூரில் ஒன்றும், மாயூரம் அல்லது மன்னார்குடியில் மற்றொன்றும்—அமைக்க உத்தேசித்துள்ளோம். ஆனால் இந்நிலையங்களை நிறுவும் இடங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த நிலையங்களிலிருந்து சுமார் 10 அல்லது 15 மைல் சுற்றுவட்டாரங்களில் உபரியாகக் கிடைக்கும் பாலைச் சேகரித்துக் குளிர வைப்பார்கள். இவ்வாறு குளிர வைக்கப்பட்ட பாலைப் பதப்படுத்தி புட்டிகளில் நிரப்பி நகர்ப்பகுதிகளில் வழங்குவதற்காகத் தஞ்சாவூருக்கு அனுப்புவார்கள்.

* 140 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) when the plant for pasteurisation of milk at Thanjavur will be started; and

(*b*) whether any cold-storage and sub-distribution centres will be located at Tiruvarur, Mannargudi and Mayuram?

The Hon. Sri P. KAKKAN : (*a*) The installation of the plant for pasteurisation of milk at Thanjavur by the Thanjavur Co-operative Milk Supply Union is expected to be started in the year 1963-64.

(*b*) Two chilling stations are contemplated under the scheme, one at Tiruvarur and the other at Mayuram or Mannargudi.

(அ) தஞ்சாவூரில், தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கும் யூனியன், பாலைக் குளிர வைப்பதற்காக 1963-64-ல் யந்திர சாதனங்களை நிறுவ உத்தேசிக்கிறோம்.

(இ) இத்திட்டத்தின்கீழ், பாலைக் குளிர வைப்பதற்கு இரண்டு நிலையங்களை நிறுவ உத்தேசித்துள்ளது. ஒன்று திருவாரூரில் நிறுவப்படும். மற்றொன்று மாயூரம் அல்லது மன்னார்குடியில் நிறுவப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாயூரமா அல்லது மன்னார்குடியா என்று முடிவு செய்ய இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

கனம் திரு. பூ. கக்கன் : காலத்தைப் பற்றி இப்போது சொல்லுவதற்கில்லை. எல்லா வேலையும் முடிந்த பிறகு இடத்தை நிர்ணயிப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்காது.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலேயே உயர்தரப் பால் கிடைக்கக்கூடிய இடம், மாவட்ட கால்நடைப் பண்ணை இருக்கக் கூடிய இடமாகிய ஒரத்தநாடு. அந்த இடத்தில் ஒரு குளிர்ச்சி நிலையம் ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் மட்டும்தானா? மற்ற மாவட்டங்களிலும் இதை அமுலுக்குக் கொண்டு வர உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் அமுலாக்க கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்பாடு செய்ய முன் வந்திருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்பாடு செய்யப்படுகிறது. கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் மூலமாக அவர்கள் பாதிப்பணம் கொடுக்கிறார்கள். அரசாங்கமும் உதவி செய்கிறது. எங்கு மாடுகள் வளர்க்க சாதகமாக இருக்கிறதோ, புல்வெளிகளுக்கு இடம் இருக்கிறதோ அல்லது பால் கிடைக்க வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த முறையில் ஏற்பாடு செய்யலாம்.

திரு. மூ. சண்முகம் : குளிர் சாதன அமைப்பு கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறதா? அல்லது அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலும் ஏற்பாடு செய்யப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் நேரடியாக இப்போது மாதவரத்தில் ஏற்பாடு செய்திருக்கிறது. இப்போது மதுரை மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி முன் வந்திருக்கிறது. அதே மாதிரி தஞ்சை மில்க் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி வந்தது. அதனால்தான் அரசாங்கம் உதவி செய்ய முன் வந்திருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை பால் பதனிடும் ஆலைக்கு அன்னிய நாட்டிலிருந்து கொவாபொரேஷன் கிடைத்தது போல மற்ற மாவட்டங்களுக்கும் இவ்வித அன்னிய கொவாபொரேஷன் கிடைக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதிலும் அமெரிக்க நாட்டு மக்கள் உதவி செய்ய முன் வரும்போது அந்த உதவியைப் பெற்று அரசாங்கம் உதவி செய்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு மாநில அரசாங்கமே, அன்னிய நாட்டு உதவி இல்லாமலேயே செய்ய ஏற்பாடும் செய்யப்படும்.

[14th August 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த மாதிரியான இடங்கள் எத்தனை உள்ளன ? எங்கெங்கு உள்ளன ?

கனம் திரு. பூ. கக்கன் : தமிழ் நாட்டில் பல உள்ளன. தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பற்றிய விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : எத்தனை ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சையில் நிறுவப்படுவது 12 லட்சம் ரூபாய் செலவில். முதலில் அந்த இடத்திற்கு 25,000 ரூபாய் கொடுக்கிறோம். கட்டடம் கட்ட 5 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். 50—50 பேஸிஸில் கூட்டுறவு சொஸைட்டி பாதி போடும், அரசாங்கத்தில் பாதி கொடுக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், உதகையில் இந்த மாதிரித் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்திரவிடப்பட்டிருக்கிறது. யந்திர சாதனங்கள் மாதவரத்திலிருந்து கொண்டு சென்று அமைப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் யந்திரங்கள் உதகைக்குப் போய்ச் சேர்ந்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மாதவரத்தில் பெரிய பாஸ்டரைசேஷன் ப்ளாண்ட் வைத்து உபயோகப்படுத்தப்படுகிறது. அங்கு வைப்பதைத் தனியாகத்தான் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

திரு. சி. பொன்னுசாமி : இப்போது இயங்கும் கூட்டுறவுப் பால் பண்ணைகள் இது போன்ற இயந்திரங்களை சீரிய முறையில் வைத்திருக்கிறதா ? சீரிய முறையில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு மூலமாகப் பால் வழங்கும் ஸ்தாபனங்களெல்லாம் நல்ல முறையில் பாலைச் சுத்தமாக வைத்துத்தான் வழங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். பால் பல மணி நேரம் கெட்டுப் போகாமல் வைக்கத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஒரு படி பால் ரூ. 1¼, ரூ. 1½-க்கு இப்போது விற்கிறது. இதைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அல்லது உற்பத்தியைப் பெருக்கியாவது விலையைக் குறைக்கத் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பால் விலை அது கிடைப்பதைப் பொருத்திருக்கிறது. அதிகமாகக் கிடைக்கும்போது விலை குறையும். கிடைப்பது கஷ்டமாக இருக்கும் போது விலை கொஞ்சம் உயரும்.

Anti-scorpion serum

*141 Q.—Sri S. NANJUNDA RAO : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the import of anti-scorpion serum has been stopped;